RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 118 | மே.5 2026 செவ்வாய்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# “இது வரலாற்று சிறப்பு மிக்க வெற்றி” விஜய் குறித்து எஸ்.ஏ.சந்திரசேகர் நெகிழ்ச்சி





சென்னை: மே.5-

“ஒரு அப்பாவாக மிகவும் சந்தோஷமாகவும், பெருமையாகவும் இருக்கிறது. இதைவிட என்ன வேண்டும்?” என விஜய்யின் தந்தை எஸ்.ஏ.சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப் பேரவைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கை காலை 8 மணிக்கு தொடங்கி விறுவிறுப்பாக நடைபெ றது. தற்போதைய நிலவரப்படி தவெக 105க்கும் மேற்பட்ட இடங்களை வசப்படுத்தும் வகையில் முன்னிலை வகித்து வருகிறது.

இது குறித்து விஜய்யின் தந்தை எஸ்.ஏ.சந்திரசேகர் பேசும்போது, “ விஜய், தான் முதல்வர் ஆக வேண்டும் என இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே கூறினார். அதற்கான களப்பணிகளையும் ஆற்றினார். என்னை விட என் மனைவி மகிழ்ச்சியாக இருக்கிறார்.

விஜய் அசைக்க முடியாத நம்பிக்கையில் இருந்தார். வெற்றி நமதே என்ற மந்திரமே விஜய்யின் தாரக மந்திரமாக இருந்தது. விஜய்யை தங்களது குடும்பத்தில் ஒருவராக தமிழக மக்கள் பார்க்கின்றனர். ஒரு அப்பாவாக ரொம்ப சந்தோஷமாகவும், பெருமையாகவும் இருக்கிறது.

இதைவிட என்ன வேண்டும்? எவ்வளவோ எதிர்ப்புகளை, சோதனைகளை தாண்டி விஜய் வெற்றி பெற்றுள்ளார். இது சாதாரண வெற்றி இல்லை. யாருடனும் கூட்டணி வைக்காமல் தனியாக நின்று வெற்றி பெற்றதே பெரிய விசியம்” என்று அவர் கூறினார்.

## பொருளாதாரக் குற்றவாளிகளிடம் இருந்து ரூ.63,143 கோடி மக்கள் பணத்தை மீட்ட மோடி அரசு

### தமிழக பாஜக பெருமிதம்

சென்னை: மே.5-

கடந்த 10 ஆண்டுகளில் பொருளாதாரக் குற்றவாளிகளிடம் இருந்து ரூ.63,143 கோடி மக்கள் பணத்தை மோடி அரசு மீட்டுள்ளதாக தமிழக பாஜக தெரிவித்துள்ளது.

இதுகுறித்து தமிழக பாஜக தலைமை செய்தித் தொடர்பாளர் நாராயணன் திருப்பதி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

கொல்கத்தாவைச் சேர்ந்த ‘கணேஷ் ஜுவல்லரி ஹவுஸ்’ நிறுவனத்தின் மூலம், கடந்த 20122014 இடைப்பட்ட ஆண்டுகளில் 25 வங்கிகளில், போலி ஆவணங்கள் மூலம் ரூ.2,672 கோடி மோசடி செய்யப்பட்டது.

இந்த மெகா ஊழலைச் செய்துவிட்டு ஐக்கிய அரபு அமீரகத்துக்குத் தப்பிச் சென்ற குற்றவாளி கம்லேஷ் பரேக்கை, சிபிஐ அமைப்பு சர்வதேச குற்றவியல் காவல் அமைப்பின் உதவியுடன் நீண்ட சட்டப் போராட்டத்துக்குப் பிறகு இந்தியாவுக்கு அழைத்து வந்துள்ளது.




கடந்த மே மாதம் அவர் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டார். கடந்த காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் வங்கிகளின் செயல்பாடுகள் மற்றும் கடன் வழங்கும் முறைகளில் இருந்த குளறுபடிகளுக்கு இந்த ஊழல் ஒரு மிகப்பெரும் சாட்சியாகும்.

ஆனால், பாஜக அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, பொருளாதாரக் குற்றங்களைச் செய்துவிட்டு வெளிநாடுகளுக்குத் தப்பி ஓடும் நபர்களைப் பிடிக்க கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டது.

குற்றவாளிகள் வெளிநாடுகளில் பதுங்கினாலும் அவர்களின் சொத்துக்களை முடக்கவும், அவர்களை இந்தியாவுக்கு அழைத்து வரவும் ஏதுவாக ‘தப்பியோடும் பொருளாதாரக் குற்றவாளிகள் சட்டம் 2018’ உள்ளிட்ட பல் வேறு வலுவான சட்டங்களை மோடி அரசு அமல்படுத்தியது.

இதன் மூலம், கடந்த 10 ஆண்டுகளில் சிக்கலான சட்ட நடைமுறைகள் தகர்க்கப்பட்டு, கொள்ளையடிக்கப்பட்ட மக்களின் பணம் மீட்கப்பட்டு வருகிறது.

கடந்த 10 ஆண்டுகளில் மட்டும், தப்பியோடிய பொருளாதாரக் குற்றவாளிகளின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டு, ஏலத்தின் மூலம் ரூ.63,143 கோடி மீட்கப்பட்டு வங்கிகளிடமும், பாதிக்கப்பட்டவர்களிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இவை அனைத்துக்கும் காரணம் நரேந்திர மோடி தலைமையிலான பாஜக அரசின் புதிய சட்டங்கள் மற்றும் நடவடிக்கைகளே. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது

## எம்.ஜி.ஆருக்கு பிறகு.. சட்டசபை தேர்தலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய விஜய்..!

சென்னை, மே.5-

தமிழகத்தில் 234 சட்டசபை தொகுதிகளுக்கான தேர்தல் கடந்த மாதம் (ஏப்ரல்) 23ந் தேதி ஒரே கட்டமாக நடந்தது. தேர்தல் களத்தில் தி.மு.க. தலைமையிலான கூட்டணி, அ.தி.மு.க., பா.ஜனதா உள்ளிட்ட கட்சிகள் அடங்கிய கூட்டணி என இருபெரும் அணிகளுடன், தமிழக அரசியலில் புதிய வரவான நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக்கழகம் மற்றும் நாம் தமிழர் கட்சியும் இறங்கின.

இது தவிர டாக்டர் ராமதாஸ், சசிகலா இணைந்து ஒரு கூட்டணி அமைத்தும் போட்டியிட்டனர். இருப்பினும் களத்தில் 4 முனை போட்டி ஏற்பட்டது. அதிலும் தி.மு.க., அ.தி.மு.க., த.வெ.க. கட்சிகளிடையே கடும் போட்டி இருந்ததை காணமுடிந்தது. அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களுடன், சுயேச்சை வேட்பாளர்களும் சேர்ந்து 234 தொகுதிகளிலும் 4 ஆயிரத்து 23 பேர் தேர்தல் களத்தில் இருந்தனர். தேர்தலுக்கு முந்தைய மற்றும் பிந்தைய கருத்துக்கணிப்புகள் வெளிவந்து பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருந்தன.



இந்த சூழலில் 234 சட்டசபை தொகுதிகளில் பதிவான வாக்குகள் இன்று (திங்கட்கிழமை) எண்ணப்பட்டு வருகின்றன. இதன் முடிவில் யார் அரியணையில் அமரப்போகிறார்கள் என்பது தெரியவரும். தற்போது நடைபெற்று வரும் தமிழக சட்டசபை தேர்தல் வாக்கு எண்ணிக்கையில், நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் ஆரம்ப கட்டத்திலிருந்தே முன்னிலை வகித்து வருகிறது. வாக்கு எண்ணிக்கை இன்னும் தொடர்ந்து நடைபெற்று வரும் வேளையில், தவெக முன்னிலையில் இருப்பது அவரது ரசிகர்கள் மற்றும் அக்கட்சியினரிடையே பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தி உள்ளது.

தமிழ்நாடு சட்டசபை தேர்தலில் யாருமே எதிர்பார்க்காத வகையில் தேர்தல் முடிவுகள் வந்து கொண்டிருக்கின்றன. அந்த வகையில், தற்போதுவரை விஜயின் தவெக 100க்கும் மேற்பட்ட இடங்களில் முன்னிலையில் உள்ளது. தமிழ்நாட்டில் ஒரு தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்க, ஒரு கட்சி அல்லது கூட்டணிக்கு 118 தொகுதிகள் தேவைப்படுகின்றன. இந்த சூழலில், விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் (தவெக) 100 தொகுதிகளுக்கு மேல் முன்னிலையில் உள்ளது.

தமிழ் சினிமா உலகில் முன்னணி ஹீரோவாக கோலோச்சிக் கொண்டிருந்த விஜய், தவெக கட்சியை ஆரம்பித்த இரண்டே ஆண்டுகளில் அரசியல் களத்திலும் வலுவாக கால் பதித்துள்ளார். முதல் தேர்தலிலேயே ஆட்சியை பிடிக்கும் நிலைக்கு வந்துள்ளார் விஜய். தமிழக அரசியல் வரலாற்றில் இது திருப்புமுனையான ஒன்றாக பார்க்கப்படுகிறது.

முன்னாள் முதல்அமைச்சர் எம்.ஜி.ஆருக்கு பிறகு கட்சி ஆரம்பித்த உடன் பெரும் தாக்கத்தை விஜய் ஏற்படுத்தி உள்ளதாக கூறப்படுகிறது. இதன்படி நடைபெற்றுவரும் சட்டசபை தேர்தல் வாக்கு எண்ணிக்கையில் தனிப்பெரும் கட்சியாக தவெக உருவெடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## குமார ராணி மீனா முத்தையாவுக்கு இறுதிச்சடங்கு: ஊர்வலத்தில் திரளாக பங்கேற்று பொதுமக்கள் அஞ்சலி

சென்னை: மே.5-

செட்டிநாடு அரசர் ராஜா சர் அண்ணாமலை செட்டியாரின் பேத்தியும், குமார ராஜா முத்தையா செட்டியாரின் மனைவியுமான குமார ராணி மீனா முத்தையா (93), சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள செட்டிநாடு வித்யாஷ்ரமம் பள்ளி, அடையாறில் குமார ராணி மீனா முத்தையா மேல்நிலைப் பள்ளி, அதேபோல், குமார ராணி மீனா முத்தையா கலை மற்றும் அறிவியல் கல்லூரி உள்ளிட்ட பல கல்வி நிறுவனங்களை தொடங்கி கல்வி உலகில் தனக்கென தனி முத்திரை பதித்தவர்.

இந்நிலையில், குமார ராணி மீனா முத்தையா வயது மூப்பு காரணமாக ஊட்டியில் நேற்று முன்தினம் காலமானார். இதையடுத்து, அவரது உடல் கோவையில் இருந்து விமானத்தில் சென்னை கொண்டு வரப்பட்டு, ராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள செட்டிநாடு மாளிகையில் உறவினர்கள், நண்பர்கள் அஞ்சலிக்காக நேற்று வைக்கப்பட்டது.



குமார ராணி மீனா முத்தையா உடலுக்கு கல்வியாளரகள், பொதுமக்கள் என ஏராளமானோர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின், அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் அவருக்கு இரங்கல் தெரிவித்திருந்தனர்.

நேற்று காலை செட்டிநாடு மாளிகையில் இருந்து குமாரராணி மீனா முத்தையாவின் உடல் ஊர்வலமாக மயிலாப்பூர் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

அவரது இறுதி ஊர்வலத்தில் பொதுமக்கள் திரளாக பங்கேற்று அவருக்கு அஞ்சலி செலுத்தினர். இறுதியாக, மயிலாப்பூர் மயானத்தில் குடும்ப உறுப்பினர்கள் சூழ, குமார ராணி மீனா முத்தையாவுக்கு இறுதிச் சடங்குகள் நடைபெற்றன.

present sale for all over Tamil Nadu

தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது

## இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டம்: பூந்தமல்லி வடபழனி வழித்தடத்தில் விரைவில் ரயில் சேவை

சென்னை: மே.5-

சென்னையில், இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டம் 116.1 கி.மீ தொலைவுக்கு 3 வழித்தடங்களில் செயல்படுத்தப்படுகிறது. இவற்றில் கலங்கரை விளக்கம் பூந்தமல்லி வரையிலான 4வது வழித்தடம் (26.1 கி.மீ) ஒன்றாகும்.

இத்தடத்தில் ஒரு பகுதியாக, பூந்தமல்லி புறவழிச்சாலை நிலையம் வடபழனிவரை 14.64 கி.மீ. தொலைவுக்கு உயர்மட்டபாதை அமைக்கப்பட்டுள்ளது. இத்தடத்தில் மெட்ரோ ரயில் பாதுகாப்பு ஆணையர் மற்றும் அவரது குழுவினர் கடந்த பிப்ரவரியில் ஆய்வு மேற்கொண்டனர்.

ரயில்வே தண்டவாளத்தின் தரம், மெட்ரோ ரயில் நிலையம், பிரேக்கிங் தொழில்நுட்பம், பயணிகள் பாதுகாப்பு தொடர்பாக ஆய்வு செய்தனர். இதுதவிர, அதிவேக சோதனை ஓட்டம் மேற்கொண்டனர்.

இதன்முடிவில், பூந்தமல்லி முதல் வடபழனி வரை வழித்தடத்தை பயன்பாட்டுக்கு கொண்டு வர மெட்ரோ ரயில் பாதுகாப்பு ஆணையர் ஒப்புதல் அளித்தார்.

அதேநேரத்தில், பூந்தமல்லி போரூர் வரை 15 நிமிட இடைவெளியில் மெட்ரோ ரயில்களை இயக்கவும், போரூர் சந்திப்பு முதல் வடபழனி தடத்தில் ஒவ்வொரு திசையிலும் ஒரு நேரத்தில் 25 கி.மீ. வேகத்தில் இயக்கவும் நிபந்தனை விதிக்கப்பட்டது.

இதையடுத்து, மார்ச் மாதம் மெட்ரோ ரயில் சேவை தொடங்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், மார்ச் 15ம் தேதி தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதால், மெட்ரோ ரயில் சேவை தொடங்கப்படாதநிலை உருவானது.

தற்போது சட்டப்பேரவை தேர்தல் வாக்கு எண்ணிக்கை நேற்று (மே 4) நடைபெறவுள்ளது. இதையடுத்து இன்னும் ஒரு வார காலத்தில் புதிய அரசு பதவியேற்கவுள்ளது.

இந்நிலையில், பூந்தமல்லி முதல் வடபழனி வரையில் மெட்ரோ ரயில் சேவை விரைவில் தொடங்கவுள்ளது. ரயில் சேவை தொடங்கும்போது, பூந்தமல்லி போரூர் வரை அனைத்து நிலையங்களில் நின்று செல்லும்.

போரூர் முதல் வடபழனி வரை இடையில் உள்ள நிலையங்களில் நிறுத்தப்படாது. பூந்தமல்லி முதல் வடபழனி வரை ரயில் இயக்கப்படவுள்ளதால், வடபழனி மெட்ரோ ரயில் நிலையத்தில் பயணிகள் இறங்கி, சென்ட்ரல் பரங்கிமலை (பச்சை நிற வழித்தடம்) வழித்தடத்தில் இயக்கப்படும் மெட்ரோ ரயில்களில் ஏறி, விரும்பிய இடத்துக்கு பயணிக்க இணைப்பு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து, சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது: பூந்தமல்லி வடபழனி வரை மெட்ரோ ரயில் சேவை தொடங்க தயாராக உள்ளது.

புதிய அரசு அமைந்தவுடன், இத்தடத்தில் ரயில் சேவையை தொடங்கி வைக்கும். இத்தடத்தில் முக்கிய நிலையங்களான போரூர், வடபழனி ஆகிய மெட்ரோ ரயில் நிலையங்கள் தயாராக இருக்கின்றன.

போரூர் வடபழனி தடத்தில் ஆலப்பாக்கம், வளரசவாக்கம் போன்ற மெட்ரோ ரயில் நிலையங்களில் இறுதிக்கட்ட பணிகள் நடைபெறுகின்றன. இதுபோல, இத்தடத்தில் மற்ற ரயில் நிலையங்களில் கட்டுமானப்பணிகள் முழுவீச்சில் நடைபெறுகின்றன.

இந்த நிலையங்களில் கட்டுமானப் பணிகளை முடித்து, படிப்படியாக பொது மக்கள் பயன்பாட்டுக்கு திறக்கப்படும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## தட்டாஞ்சாவடி தொகுதியில் புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி வெற்றி!

புதுச்சேரி: மே.5-

புதுச்சேரியில் தட்டாஞ்சாவடி தொகுதியில் முதல்வர் ரங்கசாமி வென்றார். இவர் 4,441 வாக்குகள் வித்தியாசத்தில் வென்றார். காங்கிரஸ் மாநிலத் தலைவர் எம்பி வைத்திலிங்கம் 4வது இடத்துக்கு தள்ளப்பட்டார்.



புதுச்சேரியில், தவெக கூட்டணி 2ம் இடத்திலும், 3ம் இடத்தில் சுயேட்சையும் இடம் பிடித்து 4வது இடத்தில் காங்கிரஸ் மாநிலத் தலைவர் எம்பி வைத்திலிங்கம் உள்ளார்.

புதுச்சேரியில் என்டிஏ கூட்டணி தலைவர் என்.ஆர். காங்கிரஸ் நிறுவனத்தலைவர் ரங்கசாமிக்கும், காங்கிரஸ் மாநிலத் தலைவர் எம்பி வைத்திலிங்கத்துக்கும் இடையே போட்டி நிலவியது. ஆனால் தொடக்கம் முதலே ரங்கசாமி முன்னிலை பெற்றிருந்தார்.

இறுதியில் ரங்கசாமி 10,024 வாக்குகள் பெற்று வென்றார். தவெக கூட்டணியில் உள்ள நேயம் மக்கள் கழகத்தின் விநாயகம் 5,583 வாக்குகளுடன் 2ம் இடத்திலும், சுயேட்சை வேட்பாளர் சேதுசெல்வம் 3,884 வாக்குகளுடன் 3 இடத்தில் உள்ளார். காங்கிரஸ் தலைவர் வைத்திலிங்கம் 2,990 வாக்குகளுடன் 4ம் இடத்தில் உள்ளார். நாம் தமிழர் கட்சி கார்த்திக் குமாரி 534 வாக்குகள் பெற்றார். நோட்டா 196 வாக்குகள் எடுத்திருந்தது.

அதிமுக மாநிலச் செயலர் அன்பழன் வெற்றி:

புதுச்சேரியில் கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக போட்டியிட்ட அனைத்து தொகுதிகளிலும் தோல்வி அடைந்தது. இதையடுத்து இம்முறை என்டிஏ கூட்டணியில் இரு தொகுதிகள் மட்டுமே அதிமுகவுக்கு ஒதுக்கப்பட்டன.

முதல் சுற்றில் எண்ணப்பட்ட 17 தொகுதிகளில் முதலாவதாக உப்பளம் தொகுதி முடிவுகள் அறிவிக்கப்பட்டது. அதில் அதிமுக மாநிலச்செயலர் அன்பழகன் 9008 வாக்குகளும், தவெக சிவா 7826, திமுக அனிபால் கென்னடி 5,320 வாக்குகள் பெற்றனர். இதையடுத்து 1182 வாக்குகள் வித்தியாசத்தில் அதிமுக வென்றது.



## தண்டல்கழனி கிராமத்தில் ஒரே வேலையில் பல வருடங்களாக உழைத்துவரும் 32 தொழிலாளர்களுக்கு விருது வழங்கும் விழா

மாதவரம், மே.5-

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் கிராண்ட்லையன் ஊராட்சி தண்டல்கழனி கிராமம் பாலாஜி நகர் கம்பர் தெரு ஸ்ரீ லட்சுமி அம்மன், ஸ்ரீ பகவான் வெங்கடேச பெருமாள் கோயில் அருகே உழைப்பாளர் தினமாம் மே தினத்தை முன்னிட்டு தண்டல்கழனி கிராம இளைஞர்கள் சார்பில் தண்ணீர்ப்பந்தல் திறப்பு மற்றும் தண்டல்கழனி பகுதியில் பல வருடங்களாக உழைக்கும் 32 உழைப்பாளர்களுக்கு விருது வழங்கும் விழா தண்டல்கழனி கிராம இளைஞர்கள் சிம்பு, கமல், சிவா,விக்கி,லோகேஷ், பாலா, சரவணன், ராமு உள்ளிட்ட பொறுப்பாளர்கள் ஏற்பாட்டில் வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் முன்னதாக தண்டல்கழனி சர்வீஸ் சாலையில் பொதுமக்களின் தாகம்தீர்க்க முன்னாள் அதிமுக கவுன்சிலரும் தொழிலதிபருமான எம்.சிவகுமார் தலைமை ஏற்று தண்ணீர்ப்பந்தலை திறந்து வைத்து பொதுமக்களுக்கு சுவையான குளிர்ந்த மோரினை வழங்கினார். பின்னர் விழாவிற்கு சிறப்பு அழைப்பாளர்களாக முன்னாள் கவுன்சிலரும் தொழிலதிபருமான எம்.சிவகுமார், காவல் உதவி ஆய்வாளர் பணி ஓய்வு இ.சந்திரசேகரன், காவல் உதவி ஆய்வாளர் இ.சிவகுமார், தொழிலதிபர் ஏமநாதன் ஆகியோர் கலந்துகொண்டு தண்டல்கழனி கிராமத்தில் ஒரே வேலையில் பல வருடங்களாக உழைத்துவரும் 32 தொழிலாளர்களுக்கு பொன்னாடை போர்த்தி விருதினை வழங்கி வாழ்த்தினர். இதில் சமூக ஆர்வலர்கள், கிராமபொதுமக்கள் கலந்துகொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

## சமையல் எரிவாயு, பெட்ரோல், டீசல் விலையை உயர்த்த வேண்டும்: எண்ணெய் நிறுவனங்கள் வலியுறுத்தல்

புதுடெல்லி:மே.5-

ஈரான் போர் காரணமாக கச்சா எண்ணெய் விலை உயர்ந்து வருவதால் சமையல் எரிவாயு, பெட்ரோல், டீசல் விலையை உயர்த்த வேண்டும் என எண்ணெய் நிறுவனங்கள் வலியுறுத்தி உள்ளன. கடந்த பிப்ரவரி 28ம் தேதி ஈரான் மீது அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து தாக்குதல் நடத்தின. இதையடுத்து, ஈரானும் வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவ தளங்கள் மற்றும் இஸ்ரேல் மீது பதில் தாக்குதல் நடத்தியது. ஒரு மாதத்துக்கு மேல் போர் நீடித்தது.இதன் காரணமாக ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் மூடியதால், கச்சா எண்ணெய் சரக்குக் கப்பல்போக்குவரத்து முடங்கியது. இதனால், உலகம் முழுவதும் பெட்ரோல், டீசல்,



எரிவாயு விலை கடுமையாக உயர்ந்து வருகிறது. ஆனால் இந்தியாவில் எரிபொருள் விலை இதுவரை உயர்த்தப்படவில்லை. வர்த்தக எரிவாயு சிலிண்டர் விலை மட்டுமே உயர்த்தப்பட்டு வருகிறது.

இதனிடையே, தற்காலிக போர் நிறுத்தத்தை அமெரிக்கா அறிவித்தது. எனினும், ஈரான் மீதான கடற்படை முற்றுகை தொடரும் என்று அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் அறிவித்தார். இதையடுத்து, வியாழக்கிழமையன்று கச்சா எண்ணெய் விலை ஒரு பேரலுக்கு 126 டாலருக்கு மேல் உயர்ந்தது, பின்னர் சற்று குறைந்தது. இது ஹார்முஸ் ஜலசந்தியில் நீடித்த இடையூறு குறித்த கவலைகளை அதிகரித்தது.இந்த விலை உயர்வு, அரசுக்குச் சொந்தமான எண்ணெய் நிறுவனங்களின் இழப்புகளை கணிசமாக விரிவுபடுத்தியுள்ளது, குறிப்பாக, பெட்ரோல், டீசல், விமான எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயு (எல்பிஜி) ஆகியவற்றின் விற்பனையில் அதிக நஷ்யம் ஏற்பட்டு வருகிறது. எனவே, அவற்றின் விலையை உயர்த்த வேண்டும் என எண்ணெய் நிறுவனங்கள் மத்திய அரசுக்கு கோரிக்கை வைத்துள்ளன.பணவீக்கம் அதிகரிக்கும் ஆனாலும் மத்திய அரசு உடனடியாக விலையை உயர்த்துமா என்பது தெரியவில்லை. ஏனெனில், எரிபொருள் விலையை உயர்த்தினால் பணவீக்கம் கணிசமாக அதிகரிக்கும் என அரசு கருதுகிறது.



## ஊட்டியில் குவிந்த சுற்றுலா பயணிகள்

ஊட்டி: மே.5-

மே தினம் மற்றும் தொடர் விடுமுறை காரணமாக ஊட்டியில் ஏராளமானோர் குவிந்தனர். ஞாயிற்றுக்கிழமையான நேற்று அரசு தாவரவியல் பூங்கா, படகு இல்லம் மற்றும் ரோஜா பூங்காவில் மக்கள் கூட்டம் அலைமோதியது.இதனால் பூங்காக்களில் நுழைவு சீட்டு வாங்க சுற்றுலா பயணிகள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. மேலும், ஊட்டியில் அனைத்து ஹோட்டல்கள் மற்றும் தங்கும் விடுதிகள் நிரம்பி வழிகின்றன.

அறைகளின் கட்டணம் பல மடங்கு உயர்த்தப்பட்ட போதிலும், அனைத்து விடுதிகளும் முன்பதிவு செய்யப்பட்டு, இடம் கிடைக்காத நிலை ஏற்பட்டு உள்ளது.சமவெளிப் பகுதிகளில் இருந்து சுற்றுலா பயணிகளின் வாகனங்கள் அதிகம் வருவதால், போக்குவரத்து பாதிப்பு ஏற்படாமல் இருக்கும் வகையில் ஊட்டி நகரில் போக்குவரத்தில் மாற்றம் செய்யப்பட்டிருந்தது.கேரளம், கர்நாடகா உள்ளிட்ட வெளி மாநில சுற்றுலா வாகனங்கள், நீதிமன்ற உத்தரவுப்படி மசினகுடி கல்லட்டி வழியாக ஊட்டி செல்வதற்கு, மாவட்ட நிர்வாகம் தடை விதித்துள்ளதால், சுற்றுலா வாகனங்கள் கூடலூர் வழியாகச் செல்கின்றன.இதனால், கூடலூர் நகரில் போக்குவரத்து நெரிசல் அதிகரித்துள்ளது. உள்ளூர் வாகனங்களை இயக்க நீண்ட நேரம் காத்திருக்க வேண்டி இருப்பதால் ஓட்டுநர்கள், பயணிகள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

## அக்னி நட்சத்திரம் தொடங்கியது: வேலூரில் 109 டிகிரி வெயில் பதிவு

வேலூர்:மே.5-

தமிழகத்தில் அக்னி நட்சத்திரம் இன்று தொடங்கிய நிலையில் வேலூரில் மிக அதிகபட்சமாக 109 டிகிரி வெயில் கொளுத்தியது. வேலூர் மாவட்டத்தில் தமிழகத்திலேயே கோடை காலத்தில் வெயில் அதிகமாக பதிவாகும். அதன்படி கோடைக்காலம் தொடங்கும் முன்பே கடந்த மார்ச் 25ம்தேதி முதல் 29ம் தேதி வரை 100 டிகிரியை தாண்டி வெயில் கொளுத்தியது. அதை தொடர்ந்து 2 நாட்கள் 98 முதல் 99 டிகிரி வரை வெயில் அளவு பதிவான நிலையில், கோடை துவங்கி கடந்த ஏப்ரல் 1ம் தேதி முதல் தொடர்ந்து ஒரு மாதம் வெயிலின் அளவு 102 முதல் 108 டிகிரி வரை பதிவானது. ஏப்ரல் மாதத்தின் கடைசி நாளான கடந்த 30ம்தேதி 108.3 டிகிரி வெயில் பதிவானது. இந்நிலையில் நேற்று தமிழகத்திலேயே வேலூரில் உச்சபட்ச அளவாக 109 டிகிரி வெயில் கொளுத்தியது. இவ்வாறு வெயில் கொளுத்தியதால் சாலைகளில் குறைந்தளவு வாகனங்களே சென்றன. பொதுமக்கள் பெரும்பாலும் வீடுகளிலும் மர நிழலிலும் தஞ்சமடைந்தனர்.கல்வி செய்திகள்வேலூருக்கு அடுத்தபடியாக ராணிப்பேட்டையில் 107 டிகிரியும், ஈரோட்டில் 106.2 டிகிரியும், திருவண்ணாமலையில் 105.8 டிகிரியும், திருச்சி மற்றும் கரூர் பரமத்தியில் 105.6 டிகிரியும் வெயில் அளவு பதிவாகியுள்ளது. தமிழகத்தை



பொறுத்தவரை வேலூர் உட்பட 15 நகரங்களில் 100 டிகிரியை தாண்டி வெயிலின் அளவு பதிவாகியுள்ளது. மிக குறைந்த அளவாக கொடைக்கானலில் 72.2 டிகிரி வெயில் பதிவாகியுள்ளது. இந்த நிலையில் கிருத்திகை நட்சத்திரத்தில் சூரியன் உலவும் அக்னி நட்சத்திரம் இன்று தொடங்கியது. வரும் மே 28ம்தேதி அக்னி நட்சத்திரம் நிறைவடைகிறது. இந்த காலக்கட்டத்தில் வெயிலின் உக்கிரம் மேலும் அதிகரிக்கும் என்பதால் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர்.

'வெளியில் நடமாட வேண்டாம்'இதுதொடர்பாக சுகாதாரத்துறை அதிகாரிகள் கூறியதாவது: 'இப்பாதே வெயிலின் அளவு 108 டிகிரியை தாண்டி கொளுத்தி வருகிறது. அக்னி நட்சத்திர காலங்களில் இது மேலும் அதிகரிக்கலாம். எனவே, 50 வயதுக்கு மேற்பட்டவர்கள், ரத்த அழுத்தம், நீரிழிவு நோயாளிகள், கர்ப்பிணிகள், பெண்கள் வெளியில் நடமாடுவதையோ, வாகனங்களில் செல்வதையோ தவிர்க்க வேண்டும். மேலும் உடலில் நீர்ச்சத்தின் அளவு குறையாமல் அடிக்கடி தண்ணீர் அருந்துவது, குளிர்பானங்கள், இளநீர், மோர், குளுக்கோஸ் கரைசல் எடுத்துக் கொள்வது நலம். பொதுவாக இதுபோன்ற காலங்களில் காலை 10.30 மணி முதல் மாலை 4 மணி வரை வெளியில் நடமாடுவதை தவிர்க்க வேண்டும்' என்றனர்.

அண்ணாமலையார் கோயிலில் 29ம்தேதி வரை தாராபிஷேகம்அக்னி நட்சத்திரம் தொடங்கியதையொட்டி, திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில் இன்று முதல் வரும் 29ம் தேதி வரை தாராபிஷேகம் நடைபெறும். அண்ணாமலையார் கோயிலில் அக்னி நட்சத்திர காலத்தில் இறைவனின் திருமேனியை குளிர்விக்கும் விதமாக, அக்னி தோஷ நிவர்த்திக்கான தாராபிஷேகம் நடைபெறுவது வழக்கம். அதன்படி இன்று காலை தொடங்கியது. வரும் 29ம்தேதி வரை தாராபிஷேகம் நடைபெறும். தினமும் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை, சுவாமி சன்னதி கருவறையில் இறைவனின் திருமேனியை குளிர்விக்கும் விதமாக, தாரா பாத்திரம் பொருத்தப்பட்டு, வாசனை திரவியங்கள் சேர்க்கப்பட்ட புனித நீர், இறைவனின் திருமேனியில் துளித்துளியாய் விழும். அதேபோல் கிரிவலப்பாதையில் உள்ள அடி அண்ணாமலை கோயிலிலும், திருநேர் அண்ணாமலையார் கோயிலிலும் தாராபிஷேகம் இன்று தொடங்கியது

## மும்பையில் ரூ.7 கோடி மதிப்புள்ள போதைப்பொருள் பறிமுதல்

மும்பை::மே.5-

கென்ய நாட்டின் தலைநகர் நைரோபியில் (Nairobi) இருந்து வந்த விமானம் ஒன்று நேற்று மும்பை விமான நிலையத்தில் தரையிறங்கியது. இதையடுத்து, அந்த விமானத்தில் வந்திறங்கிய தென் ஆப்பிரிக்காவின் ஜோகன்னஸ்பர்க் (Johannesburg) நகரை சேர்ந்த ஜெஹ்ரீல் லுவோடா என்ற பயணியை அதிகாரிகள் சோதனை செய்தனர்.அதில் அவர் உடைமைகளில் மறைத்து வைத்து கடத்தி வந்த 1,426 கிராம் கொக்கைன் (Cocaine) என்ற போதைப்பொருளை அதிகாரிகள் கண்டுபிடித்து பறிமுதல் செய்தனர். பறிமுதல் செய்யப்பட்ட போதைப்பொருளின் சர்வதேச மதிப்பு சுமார் ரூ.7 கோடி ஆகும். இதையடுத்து ஜெஹ்ரீல் லுவோடாவை அதிகாரிகள் கைது செய்தனர்.

மேலும் இது தொடர்பாக தென் மும்பையின் நாக்பாடா பகுதியைச் சேர்ந்த இவர், இந்த கடத்தல் தொடர்பில் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். மும்பை விமான நிலைய அதிகாரிகள் மற்றும் காவல்துறையினர் இது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்

## "அரசியல்வாதிகள் யாரும் வீட்டுக்கு வர வேண்டாம்" புனேவில் 4 வயது மகளை இழந்த தந்தை வேதனை

புனே::மே.5-

மகாராஷ்டிர மாநிலம் புனே மாவட்டம் நஸ்ராபூர் பகுதியைச் சேர்ந்த 4 வயது சிறுமியை 65 வயது முதியவர் ஒருவர் கடந்த 1ம் தேதி பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்தார்.சம்பவ இடத்துக்கு அருகில் வீட்டில் இருந்த சிசிடிவி காட்சிகளை வைத்து அவரைப் போலீஸார் கைது செய்துள்ளனர். அவர் மீது ஏற்கெனவே 2 பாலியல் வழக்குகள் இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அவரிடம் மே 7ம் தேதி வரை விசாரணை நடத்த போலீஸாருக்கு நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.இந்நிலையில், மகாராஷ்டிர மாநிலம் டெஹு பகுதியில் உள்ள நதியில் 4 வயது மகளின் அஸ்தியைக் கரைக்க வந்த தந்தை செய்தியாளர்களிடம் கூறியதாவது:

நீதி கிடைக்க வேண்டும்: "எனது மகளின் அஸ்தியைக் கரைக்க இங்கு வந்துள்ளேன். இதற்கிடையில், மகள் சீரழிக்கப்பட்டதை அறிந்து எனக்கு ஆறுதல் சொல்ல அரசியல் தலைவர்கள் பலர் வீட்டுக்கு வந்து செல்வதாக எனது வீட்டில் இருந்து உறவினர்களும், நண்பர்களும் என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு தகவல் தெரிவித்தனர். என் மகளுக்கு நீதி கிடைக்க வேண்டும்.

குற்றவாளிக்கு மரண தண்டனை வழங்க வேண்டும். அதுவரை அரசியல்வாதிகள் யாரும் எனது வீட்டுக்கு ஆறுதல் சொல்ல வர வேண்டாம் என்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். என் மகளுக்கு நீதி கிடைத்த பிறகு தாராளமாக எல்லோரையும் சந்திக்கிறேன்." இவ்வாறு சிறுமியின் தந்தை தெரிவித்துள்ளார்.இந்நிலையில், முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ் கூறும்போது, "இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள முதியவருக்கு மரண தண்டனை வழங்க வேண்டும் என்று நீதிமன்றத்தில் மாநில அரசு சார்பில் வலியுறுத்தப்படும்" என்று உறுதி அளித்து உள்ளார்.

## பரமக்குடியில் பேருந்தில் மறதியாக மாணவர் விட்டுச் சென்ற நீட் தேர்வு ஹால் டிக்கெட் உரிய நேரத்தில் ஒப்படைப்பு

பரமக்குடி: மே.5-



அரசுப் பேருந்தில் விட்டுச் சென்ற நீட் தேர்வுக்கான நுழைவுக்கூட அனுமதிச்சீட்டு வைத்திருந்த பையை அதிகாரிகள் உதவியுடன் மாணவரிடம் ஒப்படைத்த சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி அரசுக் கல்லூரி மற்றும் அரசு மகளிர் கல்லூரி என இருதேர்வு மையங்களில் நேற்று நீட் தேர்வு நடந்தது. ராமநாதபுரத்தைச் சேர்ந்த மாணவர் உதயகுமார் பரமக்குடியில் நீட் தேர்வு எழுத அரசுப் பேருந்தில் சென்றார்.அப்போது தேர்வுக்கூட நுழைவுச்சீட்டு (ஹால் டிக்கெட்), ஆதார் அட்டை மற்றும் சான்றிதழ்கள் வைத்திருந்த பையை மறந்து விட்டு பரமக்குடியில் இறங்கினார்.தேர்வு மையத்துக்கு வந்த பின்னர்தான் மாணவர் உதயகுமாருக்கு பேருந்தில் மறந்து வைத்துவிட்டு வந்தது நினைவுக்கு வந்தது. இதுகுறித்து நீட் தேர்வு நடந்த பரமக்குடி அரசுக் கல்லூரிக்கு வெளியே நின்றிருந்த பத்திரிகையாளர்களிடம் விவரத்தைத் தெரிவித்து மாணவர் உதயகுமார் உதவி கேட்டார்.பத்திரிக்கையாளர்கள் உடனடியாக பரமக்குடி அரசுப் போக்குவரத்துக் கழகத்தைத் தொடர்பு கொண்டனர். மாணவர் வந்த பேருந்து மானாமதுரை அருகே சென்று விட்டது தெரிய வந்தது.தொடர்ந்து, அரசுப் போக்குவரத்துக் கழக அதிகாரிகள் பேருந்து ஓட்டுநர், நடத்துநருக்குத் தகவல் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து அங்கிருந்து பரமக்குடி வழியாகச் செல்லும் மற்றொரு பேருந்து மூலம் பையை பரமக்குடிக்கு அனுப்பினர்.

பின்னர் மாணவர் உதயகுமாரிடம் போக்குவரத்துக் கழக அதிகாரிகள் பையை ஒப்படைத்தனர். இதையடுத்து அவர் நிம்மதியுடன் நீட் தேர்வை எழுதினார்.தேர்வுக்கு சில நிமிடங்களே இருந்த நிலையில் பத்திரிகையாளர்கள், போக்குவரத்து கழக அதிகாரிகள் உதவியுடன் நீட் தேர்வு எழுதிய சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

## வணிக காஸ் சிலிண்டர் விலை உயர்வால் சென்னையில் ஹாஸ்டல், பிஜி வாடகை 10 சதவீதம் அதிகரிப்பு

சென்னை:மே.5-

சென்னையில் வணிக காஸ் சிலிண்டர்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதால் தங்கும் விடுதிகளின் (ஹாஸ்டல், பிஜி) வாடகையை அவற்றின் உரிமையாளர்கள் 10 சதவீதம் வரை உயர்த்தியுள்ளனர்.

பல்வேறு மாவட்டங்களிலிருந்து படிக்க வரும் மாணவர்கள், வேலைக்கு வரும் இளைஞர்கள் ஹாஸ்டல், பிஜி போன்ற தங்கும் விடுதிகளில் தங்கி தங்களது படிப்பையும், வேலையையும் தொடர்கின்றனர்.

அந்த வகையில் சென்னையில் மட்டும் 15



ஆயிரத்துக்கும் மேற்பட்ட விடுதிகள் இயங்கி வருகின்றன. அதில் 12 லட்சத்துக்கும் மேற்பட்டோர் வசித்து வருகின்றனர்.

இந்நிலையில் வணிக காஸ் சிலிண்டர்களின் விலை கடுமையாக உயர்ந்ததால், விடுதிகளின் வாடகை 10 சதவீதம் வரை உயர்த்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழ்நாடு ஐடி விடுதி மற்றும் பிஜி உரிமையாளர்கள் நலச் சங்கம் வெளியிட்ட சுற்றறிக்கையில், "அமெரிக்கா ஈரான் போர் காரண மாக இந்த ஆண்டின் தொடக்கத்தில் ரூ.1,899 ஆக இருந்த 19 கிலோ வணிக காஸ் சிலிண்டர் விலை தற்போது ரூ.3,258 ஆக உயர்ந்துள்ளது.

தனால் சமையல் செலவுகள் கட்டுப்படியாகாததால், சென்னையில் ஹாஸ்டல், பிஜி வாடகை 10 சதவீதம் வரை அதிகரிக்கப்படுகிறது. அதன்படி ஏசி இல்லாத தங்குமிடத்துக்கான மாதாந்திர கட்டணம், 4 பேர் தங்கும் அறைகளுக்கு ரூ.6,500ல் இருந்து ரூ.7,500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

அதேபோல் 3 பேர் தங்கும் அறைகளுக்கு ரூ.7 ஆயிரத்திலிருந்து ரூ.8 ஆயிரமாகவும், 2 பேர் தங்கும் அறைகளுக்கு ரூ.8 ஆயிரத்திலிருந்து ரூ.9 ஆயிரமாகவும் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.


இவை அடிப்படை விலைகள்தான், இருப்பிடம் மற்றும் வசதிகளுக்கு ஏற்ப வாடகை மாறுபடலாம்" என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில் உள்ள விவரங்களின்படி, விடுதிகளின் வாடகை வரும் 5ம் தேதி (நாளை) முதல் அமல்படுத்தப்படலாம் என கூறப்படுகிறது.


ஏஜென்சிகளிடம் பெரும்பாலும் சிலிண்டர்கள் கிடைக்காததால், கள்ளச் சந்தையில் ரூ.6 ஆயிரம் முதல் ரூ.7 ஆயிரம் வரை கொடுத்தே சிலிண்டர்களை பெற வேண்டியிருப்பதால் தங்கும் விடுதிகளின் வாடகையை கூட்டுவதற்கான தேவை ஏற்பட்டிருப்பதாக சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

சென்னையில் விடுதிகளின் வாடகை அதிகரிப்பு இளைஞர்கள், மாணவர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளன.

# ரீல்ஸ் எடுக்க தண்ணீர் தொட்டி மீது ஏறிய உ.பி. இளைஞர்களில் ஒருவர் உயிரிழப்பு

## விமானப் படை ஹெலிகாப்டர் மூலம் 2 பேர் மீட்பு





லக்னோ:மே.5-

உத்தர பிரதேசத்தில் ரீல்ஸ் எடுப்பதற்காக மேல்நிலை தண்ணீர் தொட்டி மீது ஏறி, இறங்க முடியாமல் தவித்த இளைஞர்கள் விமானப் படை ஹெலிகாப்டர் மூலம் மீட்கப்பட்டனர்.உத்தர பிரதேச மாநிலம் சித்தார்த் நகர் மாவட்டத்தில் உள்ள ஒரு பழைய மேல்நிலை தண்ணீர் தொட்டியின் மீது நேற்று முன்தினம் மதியம் 1 மணியளவில் 5 இளைஞர்கள் ஏறி உள்ளனர். சமூக வலைதளத்திற்காக 'ரீல்ஸ்' எடுக்க அந்தத் தண்ணீர் தொட்டியின் மீது ஏறியுள்ளனர்.

அப்போது எதிர்பாராதவிதமாக தொட்டியின் ஏணி உடைந்ததில் 3 பேர் கீழே விழுந்தனர். இதில் ஒருவர் உயிரிழந்தார், காயமடைந்த இருவர் சிகிச்சை பெற்று வருகின்றனர். மற்ற 2 பேர் தொட்டியின் உச்சியில் சிக்கிக் கொண்டனர்.இது குறித்து தகவல் அறிந்து மாவட்ட ஆட்சியர், கூடுதல் மாவட்ட ஆட்சியர், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் மற்றும் பிற உயர்மட்ட அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு சென்றனர். மின்சாரத் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் தேசிய பேரிடர் மீட்புக் குழுவினரும் இந்த மீட்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். ஆனாலும் சுமார் 16 மணி நேரம் போராடியும் அவர்களை மீட்க முடியவில்லை. இதையடுத்து மாநில அதிகாரிகளின் கோரிக்கையை ஏற்று, விமானப்படைக்கு சொந்தமான ஐஏஎப் விவீ 17 V5 ஹெலிகாப்டர் மீட்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டது. அதிகாலை 5:20 மணியளவில் கான்ஷிராம் அவாசி காலனியை அடைந்த ஹெலிகாப்டர், வெறும் 15 நிமிடங்களில் அந்த இளைஞர்களை மீட்டது. பின்னர் அவர்கள் கோரக்பூருக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

# ஈரான் ட்ரோன்களை அழிக்க அமீரகத்துக்கு 'அயர்ன் பீம்' ஆயுதங்களை அனுப்பியது இஸ்ரேல்



டெல் அவிவ்:மே.5-

ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியபோது, ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள அமெரிக்க ராணுவ முகாம்கள் மற்றும் பிற இடங்களை குறிவைத்து ஈரான் 500 ஏவுகணைகள், 2,000 ட்ரோன்களை ஏவி தாக்குதல் நடத்தியது. இவற்றில் பெரும்பாலானவை நடுவானில் இடைமறித்து அழிக்கப்பட்டன. சில ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் அமீரகத்தில் பாதிப்பை ஏற்படுத்தின.ஐக்கிய அரபு அமீரகத்துக்கு இஸ்ரேல் ஏற்கெனவே அயர்ன் டோம் என்ற வான் பாதுகாப்பு ஆயுதங்களையும், அவற்றை செயல்படுத்த ராணுவத்தினரையும் இஸ்ரேல் அனுப்பியுள்ளது. இந்நிலையில் ஈரானின் ட்ரோன் தாக்குதலை சமாளிக்க இஸ்ரேல் புதிதாக உருவாக்கிய 'அயர்ன் பீம்' என்ற ஆயுதத்தை அமீரகத்துக்கு அனுப்பியுள்ளது. இதில் உள்ள லேசர் கற்றைகள், ஈரான் ட்ரோன்களை நடுவானிலேயே சாம்பலாக்கிவிடும்.இது தவிர 'ஸ்பெக்ட் ரா' என்ற கண்காணிப்பு கருவியையும் அமீரகத்துக்கு இஸ்ரேல் வழங்கியுள்ளது. இது ஈரானின் ட்ரோன்கள் 20 கி.மீ தூரத்துக்கு அப்பால் வரும்போதே எச்சரிக்கை விடுக்கும். இதன் மூலம் அயர்ன் பீம் ஆயுதங்களை பயன்படுத்தி ட்ரோன்களை அழித்துவிடலாம்.



# தாமஸ் கோப்பை பாட்மிண்டன் தொடர்: அரை இறுதியில் இந்திய அணி தோல்வி

ஹார்சென்ஸ்:மே.5-

டென்மார்க்கின் ஹார்சென்ஸ் நகரில் தாமஸ் கோப்பை பாட்மிண்டன் தொடர் நடைபெற்று வருகிறது. இதன் அரை இறுதி சுற்றில் இந்திய ஆடவர் அணி நேற்று முன்தினம் இரவு பிரான்ஸ் அணியுடன் மோதியது.இதில் இந்திய அணி 03 என்ற கணக்கில் தோல்வி அடைந்து வெண்கலப் பதக்கம் பெற்று தொடரை நிறைவு செய்தது. இந்திய அணியில் காயம் காரணமாக லக் ஷயா சென் களமிறங்கவில்லை. அவருக்கு பதிலாக ஹெச்.எஸ்.பிரனாய் விளையாடினார். முதலில் நடைபெற்ற ஒற்றையர் ஆட்டத்தில் இந்தியாவின் ஆயுஷ் ஷெட்டி 1121, 921 என்ற செட் கணக்கில் உலகத் தரவரிசையில் 4வது இடத்தில் உள்ள கிறிஸ்டோ போபோவிடம் தோல்வி அடைந்தார்.4வது முறையாக இதைத் தொடர்ந்து நடைபெற்ற அடுத்த ஆட்டத்தில் கிடாம்பி ஸ்ரீகாந்த் 16 21, 18 21 என்ற செட் கணக்கில் 10ம் நிலை வீரரான அலெக்ஸ் லானியரிடம் வீழ்ந்தார். இதன் பின்னர் 3வது ஆட்டத்தில் இந்தியாவின் ஹெச்.எஸ்.பிரனாய், தோமா ஜூனியர் போபோவுடன் மோதினார். இதில் ஹெச்.எஸ்.பிரனாய் 19 21, 1621 என்ற செட் கணக்கில் தோல்வி அடைந்தார்.2022ம் ஆண்டு சாம்பியனான இந்திய அணி தாமஸ் கோப்பை தொடரில் வெண்கலப் பதக்கம் வெல்வது இது 4வது முறையாகும். கடந்த 1952, 1955 மற்றும் 1979ம் ஆண்டுகளிலும் இந்தியா வெண்கலப் பதக்கம் கைப்பற்றியிருந்தது.

# ஒகேனக்கல் காவிரியில் நீர்வரத்து அதிகரிப்பு

தருமபுரி:மே.5-

ஒகேனக்கல் காவிரியாற்றில் நீர்வரத்து விநாடிக்கு 3,000 கனஅடியாக உயர்ந்துள்ளது. தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் காவிரியாற்றில் நீர் வரத்து கடந்த 3 நாட்களாக விநாடிக்கு 1,200 கனஅடியாக இருந்தது.இந்நிலையில் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் பெய்த மழை காரணமாக நீர்வரத்து சற்று அதிகரித்துள்ளது. அதன்படி, நேற்றைய அளவீட்டின்போது நீர்வரத்து விநாடிக்கு 3,000 கனஅடியாக அதிகரித்துள்ளது.



# கேரள தேர்தல் முடிவுகள் 2026 காங்கிரஸ் கூட்டணி முன்னிலை!



திருவனந்தபுரம்:மே.5-

கேரள சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி 70 தொகுதிகளில் முன்னிலை வகித்து வருகிறது. அதேநேரத்தில், மார்க்ஸிஸ்ட் தலைமையிலான இடது ஜனநாயக முன்னணியும் கடும் போட்டியை அளித்து வருகிறது.

காலை 9.30 மணி நிலவரப்படி, ஐக்கிய ஜனநாயக முன்னணி 70 இடங்களில் முன்னிலை வகித்து வருகிறது. இடது ஜனநாயக முன்னணி 65 இடங்களில் முன்னிலை வகித்து வருகிறது. அதேநேரத்தில், தேசிய ஜனநாயகக் கூட்டணி 2 இடங்களில் முன்னிலை வகித்து வருகிறது.கேரளாவில் மார்க்சிஸ்ட் தலைமையிலான ஆளும் இடது ஜனநாயக முன்னணி, காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி, பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி இடையே மும்முனை போட்டி நிலவுகிறது. மாநிலத்தில் மொத்தம் 140 சட்டப்பேரவைத் தொகுதிகள் உள்ளன. ஆளும் இடது ஜனநாயக முன்னணியில் மார்க்சிஸ்ட் 86 தொகுதிகளில் போட்டியிடுகிறது. இதர தொகுதிகள் கூட்டணி கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்டு உள்ளன.

ஐக்கிய ஜனநாயக முன்னணியில் காங்கிரஸ் 95 தொகுதிகளில் போட்டியிடுகிறது. இந்திய யூனியன் முஸ்லிம் லீக் 27 தொகுதிகளில் போட்டியிடுகிறது. இதர தொகுதிகள் கூட்டணி கட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. தேசிய ஜனநாயக கூட்டணியில் பாஜக 115 தொகுதிகளில் போட்டியிடுகிறது. இதர தொகுதிகள் அதன் கூட்டணி கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.கேரளாவில் 140 தொகுதிகளுக்கும் கடந்த ஏப்ரல் 9ம் தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற்றது. இதில் பதிவான வாக்குகள் 43 மையங்களில் தற்போது எண்ணப்பட்டு வருகின்றன. காலை 8 மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்கியது. முதலில் தபால் வாக்குகள் எண்ணப்பட்டன. அதனைத் தொடர்ந்து மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு வருகின்றன. வாக்கு எண்ணும் பணியில் 15,465 பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

# செல்போன் பயன்படுத்துவதை தடுக்க மகளுக்கு பவுன்சர் நியமித்த தந்தை



அகமதாபாத்::மே.5-

குஜராத் மாநிலம் அகமதாபாத்தைச் சேர்ந்த 16 வயது சிறுமி 24 மணி நேரமும் ஸ்மார்ட்போனில் புகைப்படங்கள் எடுப்பது, அதை சமூகவலைதளங்களில் பதிவேற்றுவது போன்ற செயல்களில் ஈடுபட்டு வந்தார்.இதை அவரது தந்தை கண்டித்தபோது அவர் கேட்கவில்லை. ஸ்மார்ட் போனுக்கும், சமூக வலைதளங்களுக்கும் அவர் அடிமையாகிவிட்டார். இந்நிலையில் அவர் செல்போன் பயன்படுத்துவதைத் தடுக்க மாதம் ரூ.65 ஆயிரம் சம்பளத்தில் பவுன்சர்களை அந்த தந்தை நியமித்துள்ளார். இது குறித்து அகமதாபாத் நகரைச் சேர்ந்த மனநல மருத்துவர் டாக்டர் முருகேஷ் வைஷ்ணவ் கூறும்போது, "அந்த சிறுமி புகைப்படங்களை பகிரும் வலைதளத்துக்கு அடிமையாகிவிட்டார். ஆன்லைனில் அறிமுகம் இல்லாத நபர்களுடன் பேசி வந்தார். இதைத் தடுக்க மாதம் ரூ.65 ஆயிரம் சம்பளத்தில் 4 பவுன்சர்களை அந்தத் தந்தை நியமித்திருந்தார். ஆனாலும், அவர் செல்போன் பயன்படுத்துவதைத் தடுக்க முடியவில்லை. இதைத் தொடர்ந்து அவர் என்னிடம் அழைத்து வரப்பட்டார். அவருக்கு மருந்து, மாத்திரைகளைத் தந்து ஆலோசனையும் வழங்கப்பட்டது. இதுபோன்று பல சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன" என்றார். இதுகுறித்து ஃபோர்ஸ்11 செக்யூரிட்டி நிறுவனத் தலைவர் நிகில் பாண்டே கூறும்போது, "செல்லப்பிராணியான நாயை தனது 17 வயது மகன் அடித்து உதைக்கிறான் என்ற புகாரின் பேரில் அதைத் தடுக்க 8 பவுன்சர்களை நியமிக்குமாறு சிறுவனின் தந்தை கேட்டுக் கொண்டார். சுமார் 9 மாதங்களாக 2 ஷிப்டுகளில் 8 பவுன்சர்கள் அந்தப் பாதுகாப்புப் பணியை மேற்கொண்டனர்" என்றார்.

அதேபோல தங்களது குழந்தைகள் போதைப் பொருட்களுக்கு அடிமையாவதைத் தடுப்பதை நோக்கிலும் பவுன்சர்களைக் கேட்கும் பெற்றோர்கள் அதிகரித்து வருகின்றனர் என்று அகமதாபாத்தில் செக்யூரிட்டி ஏஜென்சியை நடத்தி வரும் யாசின் மாலிக் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்கா போரை நிறுத்த 14 அம்ச அமைதித் திட்டத்தை வழங்கிவிட்டோம்

## ஈரான் அறிவிப்பு

டெஹ்ரான்: :மே.5-

போரை நிறுத்துவதற்காக 14 அம்ச அமைதித் திட்டத்தை நாங்கள் அனுப்பிவிட்டோம். இந்த விவகாரத்தில் இனி அமெரிக்காதான் முடிவு செய்ய வேண்டும் என்று ஈரான் அறிவித்துள்ளது.அணுசக்தி விவகாரத்தில் ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் இணைந்து தொடங்கிய போரில் தற்போது தற்காலிக சண்டை நிறுத்தம் அமலில் உள்ளது. யுரேனியம் செறிவூட்டல் பிரச்சினை தொடர்பாக அமெரிக்கா ஈரான் இடையே பேச்சுவார்த்தை நடப்பதில் இழுபறி நீடிப்பதால் போரை முடிவுக்கு கொண்டு வருவதில் சிக்கல் நிலவுகிறது. இதனிடையே நிரந்தர போர் நிறுத்தத்துக்கு ஈரான் புதிய சமரச திட்டத்தை பாகிஸ்தான் மூலம் அமெரிக்காவிடம் வழங்கியுள்ளது.ஆனால் இந்த சமரச திட்டத்தில் தனக்கு திருப்தி இல்லை என்று அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தெரிவித்திருந்தார். இதனிடையே ஈரான் அளித்த சமரச திட்டம் தொடர்பாக புதிய தகவல் வெளியாகி உள்ளது. அதில் ஈரான் 14 அம்சங்களை தெரிவித்து இருக்கிறது. லெபனான் உள்பட அனைத்து முனைகளிலும் போரை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்.ஈரானைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள கடற்படை முற்றுகையை நீக்க வேண்டும். அமெரிக்க படைகளை திரும்ப பெற வேண்டும். ஹார்முஸ் ஜலசந்திக்கு ஒரு புதிய நிர்வாக அமைப்பை நிறுவ வேண்டும். ஈரான் மீதான தடைகளை நீக்க வேண்டும். முடக்கப்பட்ட ஈரான் நாட்டு சொத்துக்களை விடுவிக்க வேண்டும். ஈரானுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் உள்ளிட்ட 14 அம்சங்கள் அதில் இடம் பெற்று உள்ளன.



மேலும் அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்க்க 30 நாள் காலக்கெடுவைவும் ஈரான் வலியுறுத்தி உள்ளது. ஈரான் அளித்த சமரச திட்டத்தில் திருப்தி இல்லை என்று அதிபர் ட்ரம்ப் தெரிவித்திருந்த நிலையில் தற்போது அதை ஆய்வு செய்ய உள்ளதாக அறிவித்து உள்ளார்.ட்ரம்ப் பரிசீலனை: இதுதொடர்பாக ட்ரம்ப் தனது சமூக வலைதள பக்கத்தில் கூறியிருப்பதாவது: ஈரான் தற்போது எங்களுக்கு அனுப்பியுள்ள சமரச திட்டத்தை நான் விரைவில் ஆய்வு செய்ய உள்ளேன். ஆனால், கடந்த 47 ஆண்டுகளில் மனிதகுலத்துக்கும் உலகுக்கும் எதிராக அவர்கள் செய்த செயல்களுக்கு இன்னும் போதுமான அளவு பெரிய விலையை அவர்கள் செலுத்தாத நிலையில், அத்திட்டம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருக்கும் என்று என்னால் கற்பனைகூட செய்து பார்க்க முடியவில்லை. இவ்வாறு ட்ரம்ப் கூறி உள்ளார்.

இதனிடையே நேற்று ஈரான் நாட்டு வெளியுறவுத்துறை துணை அமைச்சர் காசெம் கரீபாபடி கூறியதாவது: போரை நிறுத்துவது தொடர்பான 14 அம்ச அமைதித் திட்டத்தை அமெரிக்காவுக்கு வழங்கிவிட்டோம். இப்போது முடிவு அமெரிக்காவின் கையில் உள்ளது. ஜனநாயகப் பாதையைத் தேர்ந்தெடுப்பதா அல்லது மோதல் போக்கை நீடிப்பதா என்பதை அமெரிக்காதான் முடிவு செய்யவேண்டும்.இவ்வாறு அவர் தெரிவித்தார்

# அசாமில் ஹாட்ரிக் ஆட்சியை தக்க வைக்கிறது பாஜக கூட்டணி!



குவஹாட்டி:மே.5-

அசாம் சட்டப்பேரவைத் தேர்தலில் மொத்தமுள்ள 126 சட்டப்பேரவைத் தொகுதிகளில் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி 92 தொகுதிகளில் முன்னிலை வகிக்கிறது. காங்கிரஸ் 25 தொகுதிகளில் முன்னிலை வகிக்கிறது. அசாம் சட்டப்பேரவையின் மொத்தமுள்ள 126 தொகுதிகளுக்கு கடந்த 9ம் தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற்றது. இதில், 85.96% வாக்குகள் பதிவாகின. வாக்குகளை எண்ணும் பணி இன்று காலை 8 மணி முதல் நடைபெற்று வருகிறது. காலை 10.30 மணி நிலவரப்படி பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி 92 தொகுதிகளில் முன்னிலை வகித்து வருகிறது.காங்கிரஸ் கட்சி 25 தொகுதிகளில் முன்னிலை வகித்து வருகிறது. 64 தொகுதிகளில் வெற்றி பெறக்கூடிய கட்சி ஆட்சியை பிடிக்கும் எனும் நிலையில், தேசிய ஜனநாயகக் கூட்டணி பெரும்பான்மைக்கும் அதிக தொகுதிகளில் முன்னிலை வகித்து வருவதால் அக்கூட்டணி ஆட்சியை தக்கவைக்க உள்ளது.கடந்த 2016ம் ஆண்டு பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி வெற்றி பெற்று மாநிலத்தில் முதல்முறையாக ஆட்சி அமைத்தது. முதல்வராக சர்பானந்த சோனாவால் பொறுப்பேற்றார். இதையடுத்து, அக்கட்சியின் ஹிமந்த பிஸ்வா சர்மா முதல்வராக பொறுப்பேற்றார். தற்போதைய தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியைக் கைப்பற்றும் நிலையில், ஹிமந்த பிஸ்வா சர்மா மீண்டும் முதல்வராக பொறுப்பேற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது

# சார்ஜாவில் இருந்து சென்னை வந்த விமானத்தின் அவசரகால கதவை திறந்து பயணி குதித்து ஓடியதால் பரபரப்பு



சென்னை:மே.5-

சார்ஜாவில் இருந்து சென்னை வந்த விமானத்தின் அவசரகால கதவை திறந்து பயணி ஒருவர் குதித்து ஓடியதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இதனால், அடுத்ததாக லண்டனில் இருந்து வந்த விமானம் சென்னையில் தரையிறங்க முடியாததால், பெங்களூருக்கு திருப்பி அனுப்பப்பட்டது.சார்ஜாவில் இருந்து ஏர் அரேபியன் ஏர்லைன்ஸ் விமானம், 217 பயணிகளுடன் நேற்று அதிகாலை 3.25 மணிக்கு சென்னை சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கி, ஓடுபாதையில் இருந்து டாக்ஸி வேயில் வந்து நிற்க தயாரானது.அப்போது, விமானத்தில் இருந்த புதுக்கோட்டையை சேர்ந்த முகமது நிஜாமுதீன் செரீப் (30) என்ற பயணி திடீரென விமானத்தின் அவசரகால கதவை திறந்து, மின்னல் வேகத்தில் அதன் சரக்கு பாதை வழியாக வெளியில் குதித்து ஓடினார். இச்சம்பவம் சென்னை விமான நிலையத்திலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.


சென்னை விமான நிலையத்தின் ஓடுபாதை பகுதியில் அவசரகால அபாய அறிவிப்பு எச்சரிக்கை மணி ஒளிக்கப்பட்டது. உடனடியாக, பாதுகாப்பு அதிகாரிகள் விரைந்து வந்து, விமானத்தின் அவசரகால கதவு வழியாக வெளியில் குதித்து ஓடிய பயணியை சுற்றி வளைத்து பிடித்தனர்.

இதற்கிடையில், விமானம் அது நிக்க வேண்டிய இடத்துக்கு பதிலாக, டாக்ஸி வேயில் நிறுத்தப்பட்டது. இதனை தொடர்ந்து, அடுத்ததாக லண்டனில் இருந்து 284 பயணிகளுடன் பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமானம் சென்னையில் தரையிறங்குவதற்காக வந்தது.டாக்ஸி வேயில் ஏர் அரேபியன் ஏர்லைன்ஸ் விமானம் நின்று கொண்டு இருந்ததால், அந்த விமானம் சென்னையில் தரையிறங்க முடியாததால், பெங்களூருக்கு திருப்பி அனுப்பப்பட்டது.

உடனடியாக, மத்திய உளவுத்துறை அதிகாரிகள், சென்னை விமான நிலைய உயர் அதிகாரிகள் பாதுகாப்பு அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து விசாரணை மேற்கொண்டனர்.

இதற்கிடையே, ஓடும் விமானத்தில் இருந்து கீழே குதித்த பயணியை தனி அறையில் வைத்து பாதுகாப்பு அதிகாரிகள் விசாரிதனர். விசாரணையில், அந்த பயணி மனநிலை பாதிக்கப்பட்டவர் போல் பேசியதால், அவர் அவர் உண்மையில் மனநிலை பாதிக்கப்பட்டவரா என்பது உள்ளிட்ட பல்வேறு கோணங்களில் அதிகாரிகள் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.சென்னை வந்த ஏர் அரேபியன் ஏர்லைன்ஸ் பயணிகள் விமானம் சென்னையில் இருந்து மீண்டும் சார்ஜாவுக்கு அதிகாலை 4 மணிக்கு புறப்பட வேண்டும். ஆனால், இந்த சம்பவம் காரணமாக விமானம் தாமதமாக 7.45 மணிக்கு புறப்படும் என்று அறிவிக்கப்பட்டது.அதேபோல், பெங்களூருக்கு திருப்பி அனுப்பப்பட்ட பிரிட்டிஷ் ஏர்வேஸ் பயணிகள் விமானம், பெங்களூரில் இருந்து சென்னைக்கு திரும்பியது. சென்னையில் இருந்து அதிகாலை 5.35 மணிக்கு லண்டன் புறப்பட வேண்டிய அந்த விமானம் காலை 9 மணி அளவில் லண்டன் புறப்படும் என்று அறிவிக்கப்பட்டது.விமானத்தின் அவசரகால கதவை திறந்து விமானத்தில் இருந்து குதித்த பயணிக்கு லேசான சிறாய்ப்பு காயங்கள் ஏற்பட்டதால், அவருக்கு சென்னை விமான நிலைய மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. சினிமா காட்சி போல் நடந்த இந்த சம்பவத்தால், இதனால் சென்னை விமான நிலையத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது

# நிதி ஆயோக் முழு நேர உறுப்பினர்களாக ஆர்.பாலசுப்பிரமணியம், ஜோரம் அனியா நியமனம்





புதுடெல்லி::மே.5-

நிதி ஆயோக் அமைப்பின் முழுநேர உறுப்பினர்களாக ஆர். பாலசுப்ரமணியம், ஜோரம் அனியா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.நாட்டின் முதன்மை கொள்கை ஆலோசனை அமைப்பாக நிதி ஆயோக் விளங்குகிறது. இதன் தலைவராக பிரதமர் இருக்கிறார். இந்நிலையில், கடந்த ஏப்ரல் 24ம் தேதி நிதி ஆயோக்கில், அசோக்குமார் லஹிரியை துணைத் தலைவராகவும், ராஜீவ் கவுபா, கே. வி.ராஜு, கோபர்தன் தாஸ், அபய் கரந்திகர் மற்றும் எம். ஸ்ரீனிவாஸ் ஆகியோரை முழு நேர உறுப்பினர்களாகவும் பிரதமர் நியமித்திருந்தார்.

இந்நிலையில், கல்வியாளர்கள் ஜோரம் அனியா மற்றும் ஆர்.பாலசுப்பிரமணியம் ஆகியோரை நிதி ஆயோக் அமைப்பின் முழு நேர உறுப்பினர்களாக நியமிக்க பிரதமர் மோடி சனிக்கிழமை ஒப்புதல் அளித்தார். இதன்படி, முழுநேர உறுப்பினர்களின் எண்ணிக்கை 7 ஆக உயர்ந்துள்ளது.அருணாச்சல பிரதேசத்தின் பழங்குடியின சமூகமான நிஷி சமூகத்தில் இருந்து முனைவர் பட்டம் பெற்ற முதல் பெண்மணி ஜோரம் அனியா. இலக்கியம், கலாச்சாரம் போன்றவற்றில் அனியா குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளார்.மற்றொரு புதிய உறுப்பினரான ஆர். பாலசுப்பிரமணியம், ‘மிஷன் கர்மயோகி' திட்டத்தின் கீழ் உள்ள திறன் மேம்பாட்டு ஆணையத்தின் மனிதவள உறுப்பினராக உள்ளார். இவர் பல புத்தகங்களை எழுதியுள்ளார். குறிப்பாக, பிரதமரின் 50 ஆண்டுகால பொதுவாழ்வை மையமாகக் கொண்டு ‘Power Within: The Leadership Legacy Of Narendra Modi' என்ற தலைப்பில் எழுதிய புத்தகம் 2024ல் வெளியானது.

# மேகாலயாவில் 3 லட்சம் டன் நிலக்கரி வாங்கியதில் விதிகளை மீறிய சிமெண்ட் நிறுவனங்கள்



ஷில்லாங்:மே.5-

மேகாலயா மாநிலத்தில் உள்ள இரண்டு தனியார் சிமெண்ட் நிறுவனங்கள், உரிய ஆவணங்களின்றி சுமார் 2.93 லட்சம் மெட்ரிக் டன் நிலக்கரியை வாங்கியதாக உயர் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட கண்காணிப்புக் குழு தனது சமீபத்திய அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மேகாலயா மாநிலத்தில் சட்டவிரோத நிலக்கரி சுரங்கம் மற்றும் போக்குவரத்தைக் கட்டுப்படுத்த, அம்மாநில உயர் நீதிமன்றம் ஓய்வுபெற்ற நீதிபதி பி.பி. கடகே தலைமையில் ஒரு குழுவை நியமித்தது.

இதுகுறித்து விரிவாக விசாரணை நடத்திய இக்குழு தனது அறிக்கையை வெள்ளிக்கிழமை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: குறிப்பிட்ட இரண்டு சிமெண்ட் நிறுவனங்களும், கடந்த 2025ம் ஆண்டு பிப்ரவரி முதல் இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் வரையிலான காலக்கட்டத்தில், மாநிலத்திற்கு வெளியிலிருந்து நிலக்கரியைக் கொண்டு வந்துள்ளன. இதற்காக, 2024ம் ஆண்டுக்கான நிலையான செயல்பாட்டு நடைமுறைகளின் கீழ் பெறப்பட வேண்டிய கட்டாய அனுமதிகளை அவை பெறவில்லை.குறிப்பாக, கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் அந்நிறுவனங்கள் அனுமதி கோரி விண்ணப்பித்திருந்த போதிலும், தகுந்த அதிகாரிகளிடம் இருந்து அதற்கான ஒப்புதல் எதுவும் வழங்கப்படவில்லை. அனுமதி இல்லாத நிலையிலும், சுமார் 2.93 லட்சம் மெட்ரிக் டன் நிலக்கரி கொண்டு வரப்பட்டது விதிமீறல் ஆகும்.

நிலக்கரி கொண்டு வரப்பட்டதில் பல முறை கேடுகள் நடந்துள்ளது. கனிமப் போக்குவரத்துச் சீட்டுகள், வரி விலைப்பட்டியல், இவே பில்கள், உற்பத்திச் சான்றிதழ் மற்றும் எடையிடும் விவரங்கள் போன்ற அத்தியாவசிய ஆவணங்கள் எதுவுமே முறையாகப் பராமரிக்கப்படவில்லை. இவ்வாறு அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



# “எங்கள் கண் முன்னே மரணத்தை கண்டோம்” ம.பி. ஜபல்பூர் படகு விபத்தில் உயிர் தப்பியவர்கள் வாக்குமூலம்

ஜபல்பூர்:மே.5-

மத்தியப் பிரதேச மாநிலம் ஜபல்பூரில் உள்ள பார்கி அணையில் சுற்றுலாப் பயணிகள் சென்ற சொகுசுப் படகு விபத்துக்குள்ளானதில், பல குடும்பங்கள் தங்களின் உறவினர்களைப் பறிகொடுத்துப் பெரும் சோகத்தில் ஆழ்ந்துள்ளன.

மகிழ்ச்சியாக தொடங்கிய அந்த சுற்றுலாப் பயணம், மரணப் போராட்டமாக மாறிய துயரமான தருணங்களை விபத்தில் உயிர் தப்பியவர்கள் கண்ணீருடன் பகிர்ந்து கொண்டுள்ளனர். இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை தற்போது 11ஆக உயர்ந்துள்ளது. சனிக்கிழமை நடைபெற்ற மீட்புப் பணியின் போது மேலும் இரண்டு குழந்தைகளின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டன.

விபத்தில் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பிய வழக்கறிஞர் ரோஷன் ஆனந்த் வர்மா கூறுகையில், "படகு ராட்சத அலைகளில் சிக்கிக் கொண்டது. சுமார் அரை மணி நேரம் அங்கு மரண ஓலம் கேட்டது. நாற்காலிகள், மேஜைகள் மற்றும் மனிதர்கள் ஒருவர் மீது ஒருவர் விழுந்தனர். படகின் ஒரு பகுதி உடைந்து உள்ளே தண்ணீர் புகத் தொடங்கியது. எங்கள் கண் முன்னே மரணம் தெரிந்தது.உடனடியாகச் செயல்பட்டு, அங்கிருந்த ‘லைஃப் ஜாக்கெட்'களை எடுத்து எங்கள் குடும்பத்தினர் ஒவ்வொருவருக்கும் அணிவித்தோம். அவ்வாறு செய்யாவிட்டால் நாங்கள் யாரும் இன்று உயிரோடு இருந்திருக்க மாட்டோம். 11 வயது குழந்தையுடன் எப்படியோ கரையை நோக்கி நீந்தி உயிர் தப்பினோம். வானிலை முன்னெச்சரிக்கை இருந்தும் லாபத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்டு படகு இயக்கப்பட்டுள்ளது.

அவசர காலத்தில் ஊழியர்கள் முறையான வழிகாட்டுதல்களை வழங்கவில்லை. மீட்புப் படகுகள் உடனடியாக வந்திருந்தால் அத்தனை உயிர்களையும் காப்பாற்றியிருக்கலாம். இதற்குப் பொறுப்பேற்று சுற்றுலாத் துறை அமைச்சரை பதவியில் இருந்து நீக்க வேண்டும் " என்றார்.

# இடி, மின்னல் தாக்கி தாய் மற்றும் இரு மகள்கள் காயம்: விசிக நிர்வாகிகள் நேரில் ஆறுதல் - நிவாரணம் கோரி மனு





திருப்புவனம் மே.05-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருப்புவனம் ஒன்றியத்தின் செம்பூர் ஆதிதிராவிடர் குடியிருப்பு பகுதியில் கடந்த மே 1 ஆம் தேதி இரவு சுமார் 8 மணியளவில் பலத்த இடி, மின்னல் தாக்கிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. திடீரென ஏற்பட்ட மழை, இடியுடன் கூடிய மின்னல் தாக்கத்தில் அப்பகுதியைச் சேர்ந்த ஏழுமலை என்பவரது வீடு கடுமையாக சேதமடைந்தது.இந்த திடீர் விபத்தில், ஏழுமலையின் மனைவி லெட்சுமி மற்றும் அவரது இரண்டு மகள்கள் மின்னல் தாக்கத்தால் காயமடைந்தனர். அப்பகுதி மக்கள் உடனடியாக உதவிக்கு விரைந்து, காயமடைந்தவர்களை பாதுகாப்பாக வெளியே கொண்டு வந்து அருகிலுள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். தற்போது அவர்கள் சிகிச்சை பெற்று வருவதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடனடி மீட்பு மற்றும் கட்சி நிர்வாகிகள் நடவடிக்கைசம்பவம் குறித்து தகவல் அறிந்ததும், விடுதலைச்சிறுத்தைகள் கட்சியின் திருப்புவனம் கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜபிரபு தலைமையில் கட்சி நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் உடனடியாக சம்பவ இடத்திற்கு சென்றனர். அவர்கள் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறியதுடன், உடனடி உதவிகளை ஏற்பாடு செய்ய முயன்றனர்.மேலும், சம்பவம் குறித்து கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வட்டாட்சியரை தொடர்பு கொண்டு தகவல் தெரிவித்தனர். பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு அரசு சார்பில் உடனடி நிவாரண உதவி வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

மருத்துவமனையில் ஆறுதல்அடுத்த நாள் மே 2 ஆம் தேதி, மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் லெட்சுமி மற்றும் அவரது மகள்களை விசிக நிர்வாகிகள் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினர். அவர்களின் உடல்நிலை குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்ததுடன், சிறந்த மற்றும் தீவிர சிகிச்சை வழங்குமாறு கேட்டுக்கொண்டனர். நிவாரணம் கோரி மனு அளிப்புஇந்த விபத்தில் பாதிக்கப்பட்ட ஏழுமலையின் குடும்பத்திற்கு அரசு சார்பில் உரிய நிவாரண தொகை வழங்க வேண்டும் என்றும், மின்னல் தாக்கத்தில் சேதமடைந்த வீட்டிற்குப் பதிலாக புதிய வீடு கட்டித் தர வேண்டும் என்றும் கோரி மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்கப்பட்டது. இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்பட்ட இந்த குடும்பத்திற்கு உடனடி உதவி கிடைக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது. பங்கேற்ற நிர்வாகிகள்

இந்த நிகழ்வில் மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் பாலையா, வழக்கறிஞர் அணி மாநில துணைச்செயலாளர் அய்யனார், மாவட்ட துணைச்செயலாளர்கள் கண்ணன் மற்றும் பாலமுருகன், திருப்புவனம் கிழக்கு ஒன்றிய செயலாளர் ஏனாதி ராஜபிரபு, மாவட்ட அமைப்பாளர் பூவந்தி பூவலிங்கம், ஒன்றிய துணைச்செயலாளர் செம்பூர் பெரியசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டு பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு ஆதரவு தெரிவித்தனர்.

இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் கவலையையும், இயற்கை பேரிடர்களுக்கு எதிரான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் அவசியத்தையும் மீண்டும் உணர்த்தியுள்ளது.



# விருதுநகர் மாவட்டத்தில் அதிக வாக்குகளைப் பெறும் தவெக பிரதான கட்சி வேட்பாளர்கள் கலக்கம்!

விருதுநகர்:மே.5-

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள 7 சட்டப் பேரவைத் தொகுதிகளிலும் தவெக வேட்பாளர்கள் அதிக வாக்குகளைப் பெற்று வருவதால் பிரதான கட்சி வேட்பாளர்கள் கலக்கமடைந்துள்ளனர். அதோடு, பிரதான கட்சிகளின் முகவர்களும் வாடிய முகத்துடன் காணப்பட்டனர்.விருதுநகர் மாவட்டத்தில் விருதுநகர், அருப்புக்கோட்டை, திருச்சுழி, சாத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர், சிவகாசி, ராஜபாளையம் ஆகிய 7 சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் திமுக, அதிமுக, தேமுதிக, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர்களுக்கு எதிராக தவெக வேட்பாளர்கள் 7 தொகுதியிலும் களமிறக்கப்பட்டனர்.

பிரதான கட்சிகளைப் போல வாக்காளர்களை கவனிக்க முடியாவிட்டாலும் தவெகவினர் தீவிர பிரச்சாரங்களில் ஈடுபட்டு வந்தனர்.இந்நிலையில், வாக்கு எண்ணிக்கையின்போது முதல் சுற்றிலும் அதைத்தொடர்ந்தும் தவெக வேட்பாளர்கள் முன்னிலையில் இருந்து வருகின்றனர். ராஜபாளையம் தொகுதியில் தவெக வேட்பாளர் ஜெகதீஸ்வரி தொடர்ந்து முன்னிலையிலும், விருதுநகர் தொகுதியில் தேமுதிக வேட்பாளருக்கு ஈடுகொடுக்கும் வகையில் தவெக வேட்பாளர் செல்வம் 2வது இடத்திலும், திருச்சுழி தொகுதியில் தவெக வேட்பாளர் சமயன் முதலிடத்தையும், அருப்புக்கோட்டை தொகுதியில் தவெக வேட்பாளர் கார்த்திக்குமார் 2வது இடத்திலும் இருந்து வருகின்றனர்.தொடர்ந்து திமுக, அதிமுக வேட்பாளர்களுக்கு சம ஈடு கொடுக்கும் வகையில் தவெக வேட்பாளர்கள் வாக்கு பெற்றுள்ளது பிரதான கட்சி வேட்பாளர்களை கலக்கமடையச் செய்துள்ளது. தவெக எதிர்பாராத வகையில் வாக்கு வாங்குவதைப் பார்த்த பிரதான கட்சி முகவர்களும் நேற்று வாடிய முகத்தோடு காணப்பட்டனர்





# “இது வரலாற்று சிறப்பு மிக்க வெற்றி” விஜய் குறித்து எஸ்.ஏ.சந்திரசேகர் நெகிழ்ச்சி

சென்னை:மே.05-

“ஒரு அப்பாவாக மிகவும் சந்தோஷமாகவும், பெருமையாகவும் இருக்கிறது. இதைவிட என்ன வேண்டும்?” என விஜய்யின் தந்தை எஸ்.ஏ.சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கை காலை 8 மணிக்கு தொடங்கி விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. தற்போதைய நிலவரப்படி தவெக 105க்கும் மேற்பட்ட இடங்களை வசப்படுத்தும் வகையில் முன்னிலை வகித்து வருகிறது.

இது குறித்து விஜய்யின் தந்தை எஸ்.ஏ.சந்திரசேகர் பேசும்போது, “ விஜய், தான் முதல்வர் ஆக வேண்டும் என இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே கூறினார். அதற்கான களப்பணிகளையும் ஆற்றினார். என்னை விட என் மனைவி மகிழ்ச்சியாக இருக்கிறார்.

விஜய் அசைக்க முடியாத நம்பிக்கையில் இருந்தார். வெற்றி நமதே என்ற மந்திரமே விஜய்யின் தாரக மந்திரமாக இருந்தது. விஜய்யை தங்களது குடும்பத்தில் ஒருவராக தமிழக மக்கள் பார்க்கின்றனர். ஒரு அப்பாவாக ரொம்ப சந்தோஷமாகவும், பெருமையாகவும் இருக்கிறது.

இதைவிட என்ன வேண்டும்? எவ்வளவோ எதிர்ப்புகளை, சோதனைகளை தாண்டி விஜய் வெற்றி பெற்றுள்ளார். இது சாதாரண வெற்றி இல்லை. யாருடனும் கூட்டணி வைக்காமல் தனியாக நின்று வெற்றி பெற்றதே பெரிய விசியம்” என்று அவர் கூறினார்.

# மேற்கு வங்கத்தின் பால்டா தொகுதியில் மே 21ல் மறுதேர்தல்



கொல்கத்தா:மே.5-

மேற்கு வங்க மாநிலம் பால்டா சட்டப்பேரவைத் தொகுதியில் நடைபெற்ற வாக்குப் பதிவின் போது, ஜனநாயக நெறிமுறைகளுக்கு மாறாக பல்வேறு முறைகேடுகள் அரங்கேறியதைத் தொடர்ந்து, அங்குள்ள அனைத்து 285 வாக்குச் சாவடிகளிலும் மறுதேர்தல் நடத்த இந்தியத் தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.அதன்படி, மே 21ம் தேதி மீண்டும் வாக்குப்பதிவு நடைபெறும்; மே 24ம் தேதி வாக்குகள் எண்ணப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் மேற்கு வங்கத்தில் இன்று 293 தொகுதிகளுக்கு மட்டும் வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது.

வாக்குப்பதிவு இயந்திரங்களில் கறுப்பு நிற டேப் ஒட்டி வாக்குகளைத் தடுத்தது முதல், வாக்காளர்களைக் கண்டறிய வாசனைத் திரவியங்களைப் பயன்படுத்தியது வரை பல்வேறு முறைகேடுகள் குறித்த முக்கிய தகவல்களை தேர்தல் ஆணையம் அம்பலப்படுத்தியுள்ளது.பால்டா தொகுதியில் முறையான வாக்காளர்களை வாக்களிக்க விடாமல் தடுத்ததோடு, வாக்குப்பதிவு இயந்திரங்களில் உள்ள குறிப்பிட்ட வேட்பாளர்களின் சின்னங்களுக்கு நேராக கறுப்பு நிற டேப் ஒட்டப்பட்டு, அந்தப் பொத்தான்களை அழுத்த முடியாதபடி முடக்கியதாக புகார்கள் எழுந்தது.மேலும், அதிர்ச்சியூட்டும் தகவலாக, வாக்குப்பதிவு இயந்திரத்தின் பொத்தான்களில் வாசனைத் திரவியம் மற்றும் மையைப் பூசி, வாக்களித்துவிட்டு வரும் வாக்காளர்களின் விரல்களில் ஏற்படும் வாசனை மற்றும் நிறத்தை வைத்து அவர்கள் யாருக்கு வாக்களித்தார்கள் என்பதைக் கண்டறியும் சட்டவிரோதச் செயல்களும் பல வாக்குச் சாவடிகளில் அரங்கேறியுள்ளன. இது வாக்களிப்பதன் ரகசியத் தன்மையை முற்றிலுமாகச் சிதைப்பதாக அமைந்ததாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.மேலும், தொகுதி முழுவதும் பரவலாக வாக்குச் சாவடிகள் கைப்பற்றப்பட்டதையும், உண்மையான வாக்காளர்கள் மிரட்டப்பட்டுத் திருப்பி அனுப்பப்பட்டதையும் தேர்தல் பார்வையாளர்கள் உறுதி செய்துள்ளனர். தேர்தல் அலுவலர்களே வாக்காளர்களுக்கு வழிகாட்டுவது போல வாக்குப்பதிவு அறைக்குள் நுழைந்து முறைகேடுகளிலும் ஈடுபட்டது வீடியோ பதிவுகள் மூலம் தெரியவந்துள்ளது.

வாக்குச் சாவடிகளில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கேமராக்கள், வாக்குப்பதிவு மும்முரமாக நடைபெற்ற நேரங்களில் திட்டமிட்டபடி அணைத்து வைக்கப்பட்டிருந்தன. பல இடங்களில் வீடியோ பதிவுகள் மாயமாகியுள்ளன அல்லது தொடர்பில்லாத காட்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் முறைகேடுகளை மறைக்கத் திட்டமிட்டது உறுதியாகியுள்ளது.ஒரே நபர் பலமுறை வாக்குச் சாவடிக்குள் நுழைந்து கள்ள ஓட்டுகளைப் பதிவு செய்தது, ரகசியக் காப்பு விதிகளை மீறி ஒரே நேரத்தில் பல நபர்கள் வாக்குப்பதிவு இயந்திரத்தின் அருகே நின்றது போன்ற அடுக்கடுக்கான புகார்களைத் தொடர்ந்து, பால்டா தொகுதியின் ஒட்டுமொத்தத் தேர்தல் முடிவுகளும் நம்பகத் தன்மையை இழந்துவிட்டதாக ஆணையம் கருதுகிறது.

இதன் காரணமாகவே. மேற்கு வங்க மாநிலத் தலைமைத் தேர்தல் அதிகாரியின் பரிந்துரையை ஏற்று, பால்டா தொகுதித் தேர்தலை ரத்து செய்து முழுமையான மறுதேர்தலை நடத்தும் முடிவுக்கு வந்ததாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161